# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## இரண்டாம் வருடம்/முதலாம் அரையாண்டு சிறப்புக்கலைமாணித்தேர்வு - 2015/2016

## 2014/2015 Batch -January- February - 2018

## ECS 2123 Intermediate Macroeconomics

: 03 மணித்தியாலங்கள்

ஒன்றில் இரண்டு வினாக்களுக்கும், பகுதி இரண்டில் மூன்று க்களுக்கும் எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடைதருக.

---

### பகுதி I

அ. தேசியவருமானக் கணக்கீட்டின் உற்பத்திவரம்பில் உள்ளடக்கப்படும் மற்றும் உள்ளடக்கப்படாத பொருளாதார நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

(06 புள்ளிகள்)

ஆ. தேசிய கணக்கீட்டில் பயன்படுத்தப்படும் பல்வேறுபட்ட விலைகளை சுருக்கமாக விளக்குக.

(06 புள்ளிகள்)

இ. சேமிப்பின் பல்வேறுபட்ட வகைகளையும் அவை கணிக்கப்படும் முறைகளையும் சமன்பாடுகளின் உதவியோடு விளக்குக.

(08 புள்ளிகள்)

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

அ. சேயின் சந்தைவிதியினை விளக்கி, அதன் பிரதான எடுகோள்களை பட்டியலிடுக.

(06 புள்ளிகள்)

ஆ. நுகர்வு, சேமிப்புச் சார்புகளை அட்டவணை வரைபடம் மற்றும் சமன்பாடுகளைப் பயன்படுத்தி விளக்குவதோடு, அதன் கூறுகளையும் விபரிக்குக.

(06 புள்ளிகள்)

இ. பெருக்கிக் கோட்பாட்டின் எடுகோள்கள் மற்றும் அதன் முக்கியத்துவம் என்பவற்றைக் குறிப்பிட்டு விளக்குக.

(04 புள்ளிகள்)

ஈ. மொத்தக்கேள்விக்கோட்டின் எதிர்க்கணியச்சரிவிற்கான காரணிகள் மற்றும் அதில் நகர்வை ஏற்படுத்தும் காரணிகளை குறிப்பிட்டு விளக்குக.

(04 புள்ளிகள்)

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

03. அ. பின்வரும் சமன்பாடுகளை நிறுவுக.

I. C= a+ bY ஆயின் S = -a + 1-bY

II. MPC + MPS = 1

III. APC+APS =1

IV. NX = S - I

V. C= b Y ஆயின் MPC=APC, MPS=APS

(05 புள்ளிகள்)

ஆ. திறந்த பொருளாதாரம் தொடர்பான பின்வரும் தகவலகள் உமக்குத் தரப்படுகின்றன.

C=100+0.8Yd, T=0.25Y, I=200, G=200, X=100, M= 20+0.1Y (அனைத்துத் தரவும் மில்லியன் ரூபாவில்)

i. சமநிலை வருமான மட்டத்தைக் கணிப்பிடுக.

ii. ஏற்றுமதிப்பெருக்கி மற்றும் வரிப்பெருக்கியினளவு யாது?

iii. பாதீட்டுநிலுவை மற்றும் வர்த்தகநிலுவை யாது?

iv. பொதுச்சேமிப்பு மற்றும் உள்நாட்டுச் சேமிப்பு மட்டம் யாது?

v. 1200 மில்.ரூபா நிறைதொழில்மட்ட வருமானமாயின் பொருளாதாரம் வீக்கஇடைவெளியிலா அல்லது சுருக்கஇடைவெளியிலா உள்ளது? அதனை நீக்க முதலீட்டை எவ்வளவால் அதிகரிக்க வேண்டும்?

(15 புள்ளிகள்)

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

பகுதி II

04. அ. கெயின்சின் முழுவருமானக்கருதுகோளை தீர்மானிக்கும் காரணிகள் மற்றும் அதன் பிரதான இயல்புகளை விளக்குக.

(08 புள்ளிகள்)

ஆ. நிரந்தரவருமானக் கருதுகோளை விளக்கி, அது தொடர்பான உமது விமர்சனங்களைக் குறிப்பிடுக.

(06 புள்ளிகள்)

இ. நபரொருவர் 20 வயதில் வேலைசெய்யத்தொடங்கி 65 வயதில் இளைப்பாறுகிறார். மேலும் 80 வயதில் இறக்கிறார். இவரது வருடவருமானம் 250,000/- ஆகும். வாழ்க்கைவட்டக்கருதுகோளின் அடிப்படையில் இந்நுகர்வோனது நுகர்வு மற்றும் சேமிப்பு அளவுகளைக் கணிப்பிடுக.

(06 புள்ளிகள்)

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

05. முதலீடு என்பதை வரையறுத்து, அதன் வகைகள் மற்றும் அதனைத் தீர்மானிக்கும் காரணிகளை விரிவாக விளக்குவதோடு, முதலின் ஆர்முடுக்கிக் கோட்பாடு என்பதை முதலீட்டுப் பெருக்கிக்கோட்பாட்டோடு ஒப்பிட்டு ஆராய்க.

(மொத்தம் 20 புள்ளிகள்)

06. அ. IS, LM வளைகோடுகளை வரைவிலக்கணப்படுத்தி இருதுறை மாதிரியில் IS சமன்பாட்டைப் பெற்றுக் காட்டுக.

(05 புள்ளிகள்)

ஆ. பொருளாதாரமொன்றின் தரவுகள் வருமாறு,

C= 200+0.75Yd, I= 200-25i, T= 100, G=100, L= Y-100i, MS/P=500

i. IS சமன்பாட்டைப் பெறுக.

(03 புள்ளிகள்)

ii LM சமன்பாட்டைப் பெறுக.

(03 புள்ளிகள்)

iii. பேரினப்பொருளாதார சமநிலை வட்டிவீதம் மற்றும் வருமானமட்டம் என்பவற்றைக் காண்க.

(03 புள்ளிகள்)

iv. முதலீடு 100 மிலலியன் ரூபாவால் அதிகரித்தால் புதிய IS சமன்பாடு யாது.

(03 புள்ளிகள்)

v. புதிய பேரினப்பொருளாதார சமநிலை வட்டிவீதம் மற்றும் வருமானமட்டம் என்பவற்றைக் காண்க.

(03 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

07. பழம்பொருளியலாளரின் வருமானம் மற்றும் வேலைவாய்ப்பு நிர்ணய மாதிரியை கெயின்சிய வருமானநிர்ணயிப்பு மாதிரியோடு ஒப்பிட்டு வேறுபடுத்துக.

(மொத்தம் 20 புள்ளிகள்)